**OPEN ACCESS**

Manuscript ID: TAM-08042024-7826

Volume: 8

Issue: 4

Month: April

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 19.01.2024

Accepted: 22.03.2024

Published: 01.04.2024

Citation:
Paramadevan, D. (2024). Comparative Study of Tamilnadu Thappattam and Eastern Sri Lanka's Parai Mela Koothu. *Shanlax International Journal of Tamil Research,* 8(4), 97–103.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i4.7826

*Corresponding Author:
thakshayanip@esn.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Comparative Study of Tamilnadu Thappattam and Eastern Sri Lanka's Parai Mela Koothu

**Dakshayini Paramadevan**
*Senior Lecturer, Department of Dance Drama*
*Swamivipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka*
*http://orcid.org/0009-0002-2831-4856*

**Abstract**
*The eastern region of nature is a vast expanse of land. At present it consists of only three districts namely Trincomalee, Batticaloa and Ampara.The people are still identified as a significant ancestral community. The people are still identified as a significant ancestral community. The early 5th century A.D. or early 6th century A.D. marks their early history here.In the settlement of South Indian communities established twice when Kalinga princess Ulaganachi was a vassal queen of Manmunai in Batticaloa; The Paraiyar clan is one of the seventeen categories of professional society. These communities were included in the Batticaloa area which was merged into the Tholumbar division in the Jaffna area.*

*"Valruvam thotti notti vanchana kshatriya*
*Don't be sorry to be happy*
*Purantakulam mixed with life will decrease*
*Thullavar Kalinga Magon Duke has also regretted."*

*These people gave the name Valruvam. During this time, the leader of the Paraiyar community known as Moopanar performed in front of the Maha Sabha and received their kanji mutti and received their family title Rajaparai from the President of the Maha Sabha. This koothu is performed during the festivals of Sakthi temple in Kannagikovil. Similarly in Thanjavur, Dindigul and Madurai districts of Tamil Nadu, Thappattam is played in large numbers. Thappu is the dance of adavus by holding a long stick with the left hand and a small stick with the right hand and playing the adavus by beating cymbals. Though Tamilagatha Pattam is generally known as the dance art of the Paraiyar people, Arunnathi artistes can also be seen dancing in some places. Therefore, this study is based on history, culture and game patterns.*

***Keywords: Chittarasi, Valkulam, Kanjimutti, Vallanar and Arunthathi.***

**References**

1. Sadagopan V.V. Teninthiya Gramiya Kalaigal, Chennai, 1960.
2. Shanmugasundaram, S. Dr., Nattupura Padalgal.
3. Sundaram Pillai, C. Karai Kalanithi, Vada Ilankainattar Arangu, Kumaran Book House, 2000.
4. Pittigalajayasena, 12th and 13th Nadana Pada Nool, Vasana Publication, 2001.
5. Perumal, A.N., Research Scholar, Tamilaga Nattupura Kalaigal, International Institute of Tamil Studies.
6. Malarvizhi Sivagnanasothiguru, Natya Vidyadurga Press, 2009.
7. Muthu Ethirasan, Nayamigu Nattupura Padalgal, Maniam Press, 1985.
8. Varadarajan, M., Kavignar, Tamilar Themmangu Paadalgal, Vanathi Prathilagam, 1985.
9. Valanreena Elangovan, Jaffna Dance Tradition, Vetrimani Publications, 2008.
10. Vanamamalai N.M.A.L.D., Tamil Folk Songs, Chennai 1964.
11. Jayaraja Saba.Dr.Prof. Eelam Tamils Folk Dances, POSCO Publication, 2000.
12. Jeyaraja Saba.Dr.Prof., Dance Arts, Jaffna, 2007.

# தமிழகத் தப்பாட்டமும் கிழக்கிலங்கையின் பறைமேளக் கூத்தும் ஓர் ஒப்பீட்டாய்வு

***கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்***
சிரேஸ்ட விரிவுரையாளர், நடனநாடக துறை
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச்சுருக்கம்***

*இலங்கையின் கிழக்குப்பிரதேசம் நீண்டு பரந்த நிலப்பரப்பைக் கொண்டதாகும். தற்போது இது திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை எனும் மூன்று மாவட்டங்களை மட்டுமே கொண்டுள்ளதாக அமைந்துள்ளது. மக்கள் மரபுவழிவந்த ஒரு குறிப்பிடத்தக்க புராதான சமூகத்தினராகவே இன்றும் அடையாளப்படுத்தப்படுகின்றனர். கி.பி 5 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி அல்லது கி.பி 6 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி இங்கு இவர்களது தொடக்கவரலாற்றைகுறிப்பதாகஅமைகின்றது. கலிங்க இளவரசிஉலகநாச்சி மட்டக்களப்பின் மண்முனையின் சிற்றரசியாக இருந்த காலத்தில் இரண்டு தடவைகள் ஏற்படுத்திய தென்னிந்திய சமூகங்களின் குடியேற்றத்தில் பதினேழு வகை சார்ந்த தொழில்முறைச் சமூகத்தினரில் பறையர் குலமும் இடம்பெறுவதைக் காணமுடியும். இச் சமூகத்தினர் யாழ்ப்பாண பிரதேசத்தில் தொழும்பர் எனும் பிரிவிலும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் சிறைக்குடிகள் எனும் பிரிவினுள் இடம்பெற்றனர்.*

*கண்ணகிகோவில், சக்தி ஆலய திருவிழாக்களில் பறை மேளக் கூத்து நடைபெறும். தமிழகத்தில் தஞ்சாவூர், திண்டுக்கல், மதுரை மாவட்டங்களில் தப்பாட்டம் ஆடப்பட்டு வருகின்றது. தப்பு எனப்படுகின்ற ஒரு புறத்தே தோல் போர்த்திய வட்டவடிவ இசைக்கருவிகளை இடதுகையில் தொங்கவிட்டபடி மார்போடணைத்து நீளமான குச்சியை இடது கையினாலும் சிறிய குச்சியை வலது கையினாலும் பிடித்து தாளங்களை அடித்து அடவுகளை ஆடுதல் தப்பாட்டம் எனப்படுகின்றது. தமிழகத் தப்பாட்டமானது பறையரின மக்களுக்குரிய ஆடற்கலையாக அறியப்பட்டாலும் இன்று சாதி வேறுபாடு இல்லாமல் பிற சாதியினரும் இசைக்கின்றனார். பெண்களும் பறையை இசைத்து ஆடுகின்றனர் இவ் ஆய்வானது வரலாறு, பண்பாடு, ஆட்டமுறை என்பதை கவனப்படுவதாக அமைகின்றது.*

***முக்கியச்சொற்கள்:*** *சிற்றரசி, அருந்ததியினர், இசைக் கருவி, நுண்கலைகள், ஒப்பாய்வு, பறை, இலங்கை, தமிழ்நாடு.*

**முன்னுரை**

பாரம்பரியம் மிக்க பண்பாட்டின் கூறுகளைச் சிறப்போடு வெளிப்படுத்தும் தன்மை நாட்டுப்புறக் கலைகளுக்குண்டு. இவை பண்பாட்டு எல்லைகளை அடித்தளமாகக் கொண்டவை. பண்பாட்டுக் கூறுகள் மக்களின் சாத்தியங்கள், பழக்கவழக்கங்கள், கைவினைகள், உணவுமுறைகள், இடப் பெயர்வுகள் என்பவற்றை அடியொற்றியதாகவே அமைகின்றன.

நாட்டுப்புறக் கலைகளுக்குள்ளே தமிழகத்தின் தப்பாட்டமும் ஈழத்தின் பறைமேளக் கூத்தும் முக்கியத்துவம் பெறுவதோடுஒரே அடியின் பால் நிலை கொண்டமைவனவாகும்.

தொன்மையான வரலாறு இக்கலைக் குண்டு. ஆதித் திராவிட நாகரிகங்களில் பறை சிறப்பிடத்தைப் பெற்றிருந்தமை வரலாற்றுண்மையாகும். மனிதனது உழைப்பிலிருந்து பிறந்த கலையாகவே ஆய்வாளர்கள் இதனைக் கூறுவர்.

பறை பொழுதுபோக்கு அம்சங்களை மாத்திரம் வெறுமனே வெளிப்படுத்திய வாத்தியக் கருவியாக மட்டும் நிலைபெற்றதல்ல. மிக முக்கியமாக அது தகவல்களை வெளிப்படுத்துதல் என்பதனைச் சுட்டுவதாக அமையும்.

தமிழகத்தில் இவ்வாட்டமானது தப்பு எனும் பெயரால் இன்று அழைக்கப்படினும் பறையே அதன் பண்டையப் பெயராகும். பொதுவாகச் சங்க இலக்கியங்கள் பறையின் பெருமை பேசுவதைக் காணமுடியும். தோல் கருவிகள் இந்திய சங்கீதத்தில் அவநத வாத்தியங்கள் எனும் பெயரினைப் பெறுகின்றன. புஷ்கரம் என்ற சாதாரணப் பெயரும் இதற்குண்டு. புஷ்கரம் தோன்றிய வரலாற்றினைப் பரதமுனிவர் தனது நாட்டிய சாஸ்திரத்தில் கதையாகக் கூறுவார். பறையானது அதனது நீண்ட கால வளர்ச்சியில் பல்வேறு வடிவங்களில் பரிணாமமுற்றிருப்பதையும் அவதானிக்க முடியும்.

கி.பி 6ஆம் நூற்றாண்டினை மையப்படுத்தி ஈழத்தின் மட்டக்களப்பிற்கு வந்தவர்களாக கருதப்படும் புராதனத் தமிழரான - இக்கலைக்குரியவர்களான பறையரின மக்கள் ஆலய நடைமுறைகளிலும் முக்கியத்துவம் பெற்றவர்களாகவே இன்று வரையும் கருதப்படுகின்றனர்.

தமிழகத்தைப் பொறுத்தவரை கி.பி 10ஆம் நூற்றாண்டு வரையான ஒரு நீண்ட காலம் அவர்களைப் பல்வேறு நிலைகளிலும் சிறப்பித்துள்ளமை வரலாற்றுப் பதிவாகவேயுள்ளது. பிராமண ஆதிக்க வலுவில் முதலில் சிக்குண்டவர்கள் இம்மக்களே. இவர்களின் பல்வேறு சிறப்பியல்புகளையும் பிராமணர்களே பறித்தெடுத்தனர். இம்மக்களில் சாதாரண நிலையில் வாழ்ந்தவர்கள் மாத்திரமின்றி அரசவைப் பணிகளில் ஈடுபாடு கொண்டிருந்த ராசப் பறையர்களும் காலப்போக்கில் பின்தள்ளப்பட்டவர்களாகவே மாறினர். இதுவே சங்ககாலத் தமிழர் சமூகம் பின்னடைவை நோக்கிப் பயணிக்க முதலில் வழி வகுத்ததெனலாம்.

பண்டையச் சமூகக் கட்டமைப்பில் ஐவகை நிலங்களுக்கும் உரியதான கருப்பொருளில் பறையின் சிறப்பியல்பு முக்கியத்துவம் பெறுகிறது. குறிஞ்சிப் பறையானதுதொண்டகம், முடுகிடம், துடியெனவும் முல்லைப் பறையானது பம்பை, ஏறு கோட்பறையெனவும் மருதப்பறை கிணையெனவும் நெய்தற்பறை சாப்பறையெனவும் பாலைப்பறை துடியெனவும் குறிப்பிடப்படுகின்றன. போர், காவல், கொண்டாட்டங்கள், விழாக்கள், சடங்குகள் எனப் பலதரப்பட்ட செயல்பாடுகளுடன் உறவுபட்டும் இன்ப துன்பங்களில் பங்குகொண்டும் வந்துள்ளது. போர்க் கால உணர்வுக்கும் போர் நடைமுறைக்கும் பறை துணைக் கருவியாகச் செயல்பட்டுள்ளது. வாள் பயிற்சி, வேல் பயிற்சி, ஈட்டிப் பயிற்சி, மல்யுத்தம், சிலம்பப் பயிற்சி என்பவற்றோடு மாடு விரட்டுதல் (காளை அடக்குதல்), புலியாட்டம் போன்றவற்றிலும் பறை ஒலிக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் அறைபறை வகையினை கருபொருள் எனக் குறிப்பிடுவார். கருபொருள் என்பது மக்களுக்கு கருத்துக்களை ஊட்டவல்லது எனப் பொருள்படும்.

### தப்பாட்டம்

தப்பு எனப்படுகின்ற ஒரு புறத்தேதோல் போர்த்திய வட்டவடிவ இசைக் கருவியை இடதுகைத்தோளில் தொங்கவிட்டபடி மார்போடணைத்து நீளமான குச்சியை இடதுகையினாலும் பிடித்துத் தாளங்களை அடித்து அடவுகளை ஆடுதல் தப்பாட்டம் எனப்படுகின்றது. இடது கையில் பிடிக்கும் குச்சி எனும் பெயரைப் பெறுகின்றது. பிரம்பாலான இக்குச்சி சுமாராக ஒன்றேல் கால் அடி (ஒருசாண் நான்குவிரல்) நீளத்தையும் ஒரு சென்ரி மீற்றர் தடிப்பினையும் கொண்டிருக்கும். வலது கையில் பிடிக்கும்

குச்சி அடிக்குச்சி எனப்படும். சுமாராக முக்கால் அடி (ஒருசாண்) நீளத்தையும் மூன்று சென்றி மீற்றர் சுற்றளவினையும் கொண்டுள்ள இக்குச்சி பூவரசு மரத்தினாலானது. இதனை உருட்டுக்குச்சி எனவும் கூறுவர். தப்பை அடிக்கும்போது இடது கையிலுள்ள குச்சியின் ஒரு முனை பெருவிரலிலும் மையப்பகுதி மோதிரவிரலிலும் மேற்பகுதியூடாகச் செல்லு மாறும் பிடித்துக் கொள்ளும் நிலையில் உள்ளங்கையோ தப்பைத் தாங்கிப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

தப்பைப் புரிந்து கொள்வதென்பது ஒரு இலகுவான காரியமாகாது. பொதுவாக இசையைக் கேட்டு அனுபவித்தலுக்கும் அதனைப் புரிந்துகொள்வதற்கும் பாரிய வேறுபாடுண்டு. தப்பைப் பொறுத்தவரையில் இசையோடு அதன் செயல்பாடும் ஒன்றி வருவது அதன் சிறப்பியல்பாக அமையும்.

தப்பு இசைக் கருவியானது பலாமரம், பூவரசமரம் அல்லது வேம்பு போன்ற ஏதாவதொரு மரத்தினால் செய்யப்படுகின்றது. இதனை வட்ட வடிவச் சட்டமாக அமைப்பர். வட்ட வடிவமாக அமைக்கத்தக்க வகையில் முதலில் மரம் நன்கு சீவப்பட்டு நான்கு விரல் கட்டை அளவினாலான மூன்று அல்லது நான்கு வளைந்த துண்டுகள் பெறப்பட்டு அவை, இரும்புத் தகட்டின் உதவி கொண்டு ஒன்றுடன் ஒன்று பொருத்தப்படுகின்றன. வட்டவடிவமான அச்சட்டத்தில் சாணத்தைப் பூசி ஒருநாள் முழுவதும் வெயிலில் காய வைக்கின்றனர். பின்னர் சுத்தம் செய்து சாம்பல் பூசிக் இளம்கன்றின் காயவைத்த தோலைப் பசைப்பூசிய வட்டச் சட்டத்தில் இழுத்து ஒட்டுகின்றனர். இதனை ஒட்டுவதற்கு புளியங்கொட்டையும் வெந்தயமும் கொண்டு காய்ச்சிய பசை பாவிக்கப்படுகின்றது. இவ்வாறு செய்யப்படுகின்ற தப்பின் விட்டத்தின் உள்ளளவு பொதுவாக முக்கால் முழமாகவும் வெளியளவு ஒருமுழமாகவும் இருக்கும். இவ்வாறான தப்பே சிறப்பாக ஒலியெழுப்பும் தன்மையைக் கொண்டது.

தமிழகத் தப்பாட்டமானது பொதுவாக பறையரின மக்களுக்குரிய ஆடற்கலையாக அறியப்பட்டாலும் இன்று பல்வேறு சாதியைச் சார்ந்து கலைஞர்களும் ஆடுவதைக் காணமுடியும். இவ்ஆட்டமானது சமீப காலம் வரை இறப்புச் சடங்குகளுக்கும் ஊர் அறிவித்தலுக்கும் காளை விரட்டுதல், சிலம்பாட்டம், புலி ஆட்டம் போன்றவற்றிற்குப் பயன்பட்டுவந்தது. ஆனால் தற்போது இளைஞர்களை முக்கியப்படுத்தியதான இவ்ஆட்டம் மேடை நிகழ்வாகவும் மாறி கலைவிழாக்கள், பேரணிகள், ஊர்வலங்கள், மாநாடுகள் என பல தரப்பட்ட நிகழ்வுகளிலும் முக்கியத்துவம் பெற்றிருப்பதோடு உயர்கல்வி நிறுவனங்கள், கலைகலாசார மையங்கள், திரைப்படத்துறை என விரிவுபட்டு நிற்பதையும் காணலாம். வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும் தங்களது கலை மற்றும் பொது நிகழ்வுகளில் தமிழகத்தின் தப்பாட்டக் குழுக்களை அழைத்து பங்கேற்கச் செய்வதும் முக்கியப்படுத்தப்படத் தக்கதாகவேயுள்ளது.

**கிழக்கிலங்கையில் பறைமேளம்**

கிழக்கிலங்கையில் வாழ்ந்து வருகின்ற வள்ளுவர் குலமெனும் பறையரின மக்கள் மரபுவழிவந்த முக்கிய புராதன சமூகத்தினராகவே இன்றும் அடையாளப்படுத்தப்படுகின்றனர். கி.பி 5ஆம் நூற்றாண்டிலும் பின்னர் சோழராட்சிக் காலத்திலும் இவர்கள் இங்குக் குடியேறியிருக்க முடியும். கலிங்க இளவரசி உலகநாச்சி மட்டக்களப்பின் மண்முனை சிற்றரசியாக இருந்த காலத்தில் இரண்டு தடவைகள் ஏற்படுத்திய தென்னிந்திய சமூகங்களின் குடியேற்றத்தில் பதினேழு வகை சார்ந்த தொழில்முறைச் சமூகங்களில் பறையரினமும் இடம் பெறுவதைக் காணலாம். இவர்களுக்கான முதல் குடியிருப்பு தாளங்குடாவையே மையப்படுத்துவதாகவுள்ளது. தமிழகத்தில் காணப்படும் பத்துக்கும் மேற்பட்ட

சாதிப்படி நிலையில் ஏழு பிரிவுகள் மட்டக் களப்பில் தென்படுவதால் இக்கருத்து வலுப் பெறவே செய்யும். இவர்கள் இங்குச் சிறைக்குடிகள் என்ற வரையரைக்குள் உள்ளாக்கப்பட்டாலும் சமூக மற்றும் ஆலயக் கடமைகளில் இவர்களுக்கான பங்களிப்பு முக்கியத்துவம் நிறைந்ததாகவே கொள்ளப்பட வேண்டியதாகின்றது. இச்சமூகத் தலைவர்கள் மூப்பாளர் என அழைக்கப்படுவதுவும் திருப்படைக் கோவிலான கோவில் போரதீவு சித்திர வேலாயுதர் ஆலயத்தில் அவர்களுக்குத் திருவிழா வழங்கப்பட்டுள்ளமையும் சமூக சிறப்பாகவே கொள்ளவேண்டும்.

பறையாட்டத்தில் இவர்களால் இசைக்கப்படும் கருவிகள் தழிழகத்தின் தப்பைப் போலன்றி முற்றிலும் மாறுபட்டதாகும். குறித்துச் சொல்லப் போனால் இவையே சங்ககால இசைக்கருவிகள் எனலாம். கி.பி 5ஆம் நூற்றாண்டில் அல்லது கி.பி 11ஆம் நூற்றாண்டில் (சோழராட்சிக் காலம்) இவர்கள் மட்டக்களப்பிற்கு வந்தபோது இவர்களால் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் வாத்திய கருவிகளையே தலைமுறை தலைமுறையாக இவர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். இவர்களது இசைக்கருவிகளாக 01. இராசமேளம், 02. பறைமேளம், 03. தம்பட்டம், 04. சொர்ணாளி என்பன இடம்பெறுகின்றன.

இராசமேளம்-இராசப்பறை என்ற பெயரிலும் அழைக்கப்படுகின்றது. இதன் வடிவ அமைப்பு பெரும்பாலும் தமிழகத்தின் பெரிய மேளத்தை ஒத்ததாகவிருக்கும். இது முன்னர் மன்னர்களதும் பின்னர் ஐரோப்பிய ஆட்சித் தலைமை நிருவாகிகளதும் அதனைத் தொடர்ந்து வன்னிமைகளதும் வரவேற்புக்களின் போது இசைக்கப்பட்டு வந்ததாகும். தற்போது இது இசைக்கப்படுவதில்லை. பறை மேளக் கூத்து, மகிடிக்கூத்து போன்ற அரங்க நிகழ்வுகளின்போது பாயை விரித்து பட்டுத்துணி போட்டு அதன்மேல் இதனை வைத்து வெள்ளைத்துணியால் மூடிவிடுவர். பறைமேளம் பெரிய பறை என்ற பெயரினைப் பெறுகின்றது. இது தமிழ்நாட்டில் காணப்படும் உறுமியின் வடிவை ஒத்ததாகும். இதன் வலப்பக்கத்தை உச்சம் எனவும் இடப்பக்கத்தை தொப்பை எனவும் அழைப்பர்.

தப்பாட்டம் சிறு பறை என்ற பெயரால் குறிக்கப்படும். ஒரு பக்கம் மட்டும் வாசிக்கக் கூடிய கொட்டு இசைக் கருவியே இது. தமிழ்நாட்டில் காணப்படும் தமக்கு என்ற தோலிசைக் கருவியை ஒத்ததாக இது அமையும். சொர்ணாளி எனும் குழலிசைக் கருவி தமிழ்நாட்டின் கட்டைக் குழலின் அமைப்பைக்கொண்டது. ஒன்றரையடி நீளத்தைக் கொண்ட இக்கருவி ஐந்து துளைகளையுடையது. கருங்காலியினால் வடிவமைக்கப்படுமிது பனையோலையினாலான ஊதுகருவியை நுனியில் கொண்டிருக்கும்.

### வாழ்வியல் மற்றும் வழிபாட்டுக் கருமங்கள்

1. வரவேற்பு மற்றும் பொது நிகழ்வுகள்
2. பூசைகள், திருவிழாக்கள் மற்றும் விசேட தினங்கள் உட்பட்ட ஆலய நிகழ்வுகள்
3. திருமணம் மற்றும் பூப்பு நீராட்டு விழாக்கள் (தற்போது இது இடம் பெறுவதில்லை)
4. சித்திரை வருடப் பிறப்பு மற்றும் சித்திரைப் பௌர்ணமி
5. கண்ணகி விழாவோடு தொடர்புபடும் கொம்பு முறிவிளையாட்டு

### சாவியல் கருமங்கள்

1. மரணவீடு
2. சுடலைக்கு செல்லும் ஊர்வலம்
3. அடக்கம் செய்தல் - தகனம் செய்தல்
4. சாம்பல் எடுத்தல் மற்றும் கரைத்தல்

### ஆட்டமுறைகளும் தாளஅடவுகளும்

### அ. தப்பாட்டம்

வெவ்வேறு நிகழ்ச்சிகளுக்காகத் தப்படித்தல் நிகழ்த்தப்பட்டாலும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்குமெனத் தனித்தனியாக அடிக்கும் முறை தப்பில் அவதானிக்கப்படுகின்றது. சப்பரத்துஅடி,

டப்பாஅடி, பாடம் அடி, சினிமாஅடி, ஜொயின்ட் அடி, மருள் அடி, சாமிசாட்டுதல் அடி, மாரடித்தல் அடி, வாழ்த்து அடி என்பன அவற்றில் சில. இதில் ஆட்ட வடிவங்கள் நெறிமுறைபடுத்தப்பட்டுள்ளன. வெறும் நடனமாக இல்லாமல் இதன் அடவுகளில் நாடகத் தன்மை செறிந்திருப்பதைக் காணமுடியும்.

தப்பாட்டத்தில் இருபத்தியிரண்டு தாளங்கள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் முதல் நான்கு தாளங்களும் பதினான்கு வகையான அடவுகளை வெளிப்படுத்தும் தன்மைமிக்கன. இவ்வடவுகளை அடிப்படையாகக் கொண்டே ஏனைய தாளங்களுக்கான ஆட்ட வகைகளும் அமைகின்றன.

**தாளம்: 01**

டண்டடகிடடகிடடட்டா
டண்டடகிடடகிடடா

இதன்போது முன் பின் அடவு, இருபக்கவைப் படவு, குனிந்து எழும்புதல் அடவு, சைடாட்டை அடவு என்பன நிகழ்த்தப்படும்.

**தாளம் : 02**

ட்ரிஜிட் ட்ரிஜிட் டகிடடட்டா
ட்ரிஜிட் ட்ரிஜிட் டகிடடா

இதன்போது இருபக்கம் திரும்புதல் அடவு, வலது கால் தூக்குதல் அடவு, நடந்து நிற்றல் அடவு என்பன நிகழ்த்தப்படும்.

**தாளம் : 03**

ஜின்ஜினாக்குடாக்கிடக்கு
ஜின்ஜினாக்குடாக்கிடா

இதன்போது தலைவெட்டு அடவு, சலசலப்பு அடவு, இருபக்க நகர்தல் அடவு என்பன நிகழ்த்தப்படும்.

**தாளம் : 04**

ஜிட்டக்கு ஜிட்டா
ஜிட்டக்கு ஜிட்டா

இதன் போது குதிகால் குத்தும் அடவு, இருபக்க உடல் சரிப்பு அடவு, கால்தூக்கி பின்பார்த்தல் அடவு என்பன நிகழ்த்தப்படும்

**தாளம் 05**

முதல் தாளம் 22 வரையான அடவுகள் முன்சொன்ன அடவுகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்துகைப் போக்குக்கு ஏற்றவாறு அமையும்.

**ஆ. பறைமேளம்**

பறைமேளத்தைப் பொறுத்தவரை ஆட்டமுறைகள், அடவுகள் மற்றும் தாளவகை குறித்து இது வரைமுறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை பெரும் இடைவெளியினை தோற்றுவிப்பதாக அமைகின்றது. இதுவரை வெளிவந்துள்ள ஆய்வுக் கட்டுரைகள் நிகழ்வுகளின் பின்புலத்தை மையப்படுத்தியே ஆட்ட முறைகளையும் தாளவகைகளையும் நிர்ணயம் செய்திருக்கின்றன. இந்த வகையில் கவிஞர் தேனூரானின் மட்டக்களப்பின் பறை மேளக்கூத்து தொடர்பான ஆய்வுக்கட்டுரை (தேனகம்) முக்கியமான தகவல்களைப் பதிவு செய்திருக்கின்றது.

இச்சமூகத்தினரின் சிறப்பு நிகழ்வுகள் கூத்து என்ற பெயரில் தனியாக இடம் பெறுவதுண்டு. இதில் ஆரம்பத் தாளமாக சிறுபறையும் சொர்ணாளியும் (குழல்) இசைப்பர். அப்போது சொர்ணாளி வாசிப்போர் முன் வரிசையிலும் சிறுபறை வாசிப்போர் பின் வரிசையிலும் நிற்பர். சபையினரை அழைக்கும் நிகழ்வாக இது அமையும். அடுத்துப் பூசைத்தாளம் வாசிக்கப்படும் போது இறைவனை வணங்குவதுபோல் அபிநயம் செய்து ஆடுவர். அடுத்து கோணங்கித் தாளம் வாசிக்கப்படும். அதன் போது கலைஞர்கள் கோணங்கிபோல் உடலை வளைத்து வளைத்து ஆடுவர். அடுத்து இராச வரவுத் தாளம் வாசிக்கப்படும். இதில் கலைஞர்கள் கம்பீராக முன்னாலும் பக்கவாட்டாகவும் நடந்து சபையினரைப்

பார்த்தவாறு அபினயித்து ஆடுவர். ஆலய நிகழ்வுகள், ஆடம்பர நிகழ்வுகள், இறுதிக் கிரியைகள் என்ற பிரிவில் ஆட்ட முறைகளும், தாளங்களும் வேறாக நிர்ணயம்செய்யப்படுகின்றன.

ஆலய செயற்பாடுகளுக்குரிய ஆட்ட முறையில் தப்பாட்டத்தை ஒத்ததாக ஆலயத்தளம், அபிமீகத்தளம், அழைப்பத்தளம், கற்றாலைத்தளம், பூசைத்தளம் என்பவை இடம் பெறுகின்றன. இதில் நிகழ்த்துகைப் பாங்கு இடம்பெறமாட்டாது. ஆடம்பரத்துக்கான தாளவகைகள் நிகழ்த்துகைப் பாங்கினுக்குரியவையாகும். இதில் வரவுத்தாளம், வரவேற்புத் தாளம், பூசைத்தாளம், கோணங்கித்தாளம், இராச தாளம், பல்லாக்குத்தாளம், நாலடித்தாளம், ஆறடிதத்தாளம், எட்டடித்தாளம், புட்டுத் தாளம், தட்டுமாறும் தாளம் ஆகியவைக்கு ஆட்டம் இடம்பெறும். இறுதி நிகழ்வுக்குரிய ஆட்டமுறைகளில் ஆரம்பத் தாளம், அறிவிப்புத்தாளம், தூக்குத்தாளம், சந்தி மறித்தல் தாளம், சுடலைத் தாளம் என்பன இடம்பெறும். இதில் சந்தி மறித்தல் தாளம் ஆட்டமுறைகளைக் கொண்டதாக இருக்கும்.

**உசாத்துணை நூல்கள்**

1. சடகோபன் வி.வி - தென்னிந்திய கிராமியக் கலைகள், சென்னை, 1960.
2. சண்முகசுந்தரம்.சு. நாட்டுப் புறப் பாடல்கள்
3. சுந்தரம்பிள்ளை செ. காரை., வட இலங்கை நாட்டார் அரங்கு, குமரன் புத்தகஇல்லம், 2000.
4. பிட்டிகல ஜயசேன 12,13ம் தர நடனப் பாடநூல், வாசனா வெளியீடு 2001
5. பெருமாள் ஏ.என். முனைவர், தமிழக நாட்டுப்புறக் கலைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
6. மலர்விழி சிவஞானசோதிகுரு, நாட்டிய வித்யா துர்க்கா அச்சகம், 2009
7. முத்து எத்திராசன், நயமிகு நாட்டுப் புறப்பாடல்கள், மணியம் அச்சகம் 1985
8. வரதராஜன் மா., தமிழர் தெம்மாங்குப் பாடல்கள், வானதி பதிப்பகம் 1985
9. வலன்ரீனா இளங்கோவன் - யாழ்ப்பாணத்து நாட்டியமரபு, வெற்றிமணி பதிப்பகம் 2008.
10. வானமாமலை நா., தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள், சென்னை 1964
11. ஜெயராசா சபா., ஈழத்தமிழர் கிராமியநடனங்கள், பொஸ்கோ பதிப்பகம் 2000.
12. ஜெயராசா சபா., ஆடற்கலை, யாழ்ப்பாணம் 2007.